සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/05/MF/01/சுற்றுநிருபம்
ඔබේ අංකය / உமது இல / Your No: ......................
දිනය / திகதி / Date: 2019.04.09

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம்:- 2019/03**

**சகல சமுர்த்தி வங்கி / வங்கிச்சங்க முகாமையாளர்களுக்கும் ,**

## சமுர்த்தி வங்கியின் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு ரூபா 15,000/- "தன சவிய" சலுகைக் கடன் வழங்கும் திட்டம்

### 01 அறிமுகம்.

சமுர்த்தி வங்கியின் கட்டாயசேமிப்பு கணக்குகளை செயற்படுத்தி வரும் கணக்குரிமையாளர்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்வதற்கான விசேட செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. இதன் பிரகாரம் இலக்கிடப்பட்டவர்களின் மூலதனத் தேவையினை விரைவாக வழங்கி அவர்களை ஒரு வலுவான பொருளாதாரச் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கான சுற்றாடலை உருவாக்கிக் கொடுத்தல் இவ்வேலைத்திட்டத்தினூடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் பிரகாரம் இவ்வேலைத்திட்டத்ததை செயற்படுத்ததுவதற்கான வழிகாட்டல்கள் இத்தால் வழங்கப்படுகின்றது.

### 02. நோக்கம்

1. சமுர்த்தி பயனுகரிகள் உட்பட்ட கட்டாய சேமிப்பு கணக்கு உரிமையாளர்களாகிய குறைந்த வருமானம் பெறுபவரின் பொருளாதார பலத்தினை மேன்மையடையச் செய்தல் , அதனூடாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை ஸ்திரமான நிலைமைக்கு (Stable) கொண்டு செல்ல கைகொடுத்து உதவுதல் .

2. தங்கியிருக்கும் மனப்பாங்கினை இல்லாதொழித்து இலக்கு குழுவினரின் எதிர்காலத்தினை அவர்களின் சுயபலத்தினால் சுபீட்சமடையச் செய்தல்.

3. தற்போது வருமானமீட்டும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள / ஈடுபட எதிர்பார்த்துள்ள பிரிவினரின் நிதிமூலதனத் தேவைக்கு தீர்வினை பெற்றுக் கொடுத்தல்.

4. சமுர்த்தி வங்கிக் கடன்களின் அளவினை அதிகரித்து இலாபத்தன்மையை உயர்த்துதல்

### 03 கடன் தொகையினை பெற்றுக்கொள்ளக்கூடிய இலக்கு குழுவினர்

சமுர்த்தி வங்கியில் கட்டாயசேமிப்பு கணக்கினை பேணிவரும் கணக்குரிமையாளர்களில் சிறுதொழில் முயற்சியாளர்கள் மாத்திரம் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் கடன் வசதியினை பெற்றுக்கொள்ளமுடியும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் (நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |
| | | Hot Line :0112-889007 | | | |

**04** **கடன் பெற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள்.**

சிறு கைத்தொழில்கள், விவசாயம் , வியாபாரம், மீன்பிடி மற்றும் மிருகவளர்ப்பு ,உட்பட தேவையான வருமானமீட்டும் நடவடிக்கைகளை புதிதாக ஆரம்பிப்பதற்கு அல்லது தற்போது நடைமுறைப்படுத்தும் திட்டத்திற்கும் இக்கடன் வசதியினை பெற்றுக்கொள்ள முடியும்.

**05.** **கடன் தொகையின் எல்லை**

முதலாம் கட்ட கடன் தொகை ரூபா 15000/= ஆகும். கட்டாய சேமிப்பு வைப்புக்கணக்கின் மீதிக்கு அமைய உயர்ந்த பட்ச கடன்தொகைளினை வழங்கமுடியாத சந்தர்ப்பங்களில் வைப்புக் கணக்கின் மீதியினை அடிப்படையாகக் கொண்டு அதற்கு பொருத்தமான விதத்திலான கடன் தொகையினை வழங்கமுடியும். முதல் வழங்கப்படும். இக்கடன் உரிய முறையில் திருப்பிச் செலுத்தப்படுமாயின் இரண்டாவது கடனாக இடைநடுவில் மேலும் ரூபா 15000/= தொகையினை இன் நிபந்தனைகளுக்கு உட்பட்ட விதத்தில் வழங்கமுடியும்.

**06** **வருடாந்த வட்டி வீதம்**

வருடாந்த வட்டி வீதம் 6 % மாகும். சமாந்தர வட்டி கணிப்பீட்டு முறையில் (Flat Rate) வட்டி கணிக்கப்படல் வேண்டும். சகண அருண கடன் திட்டத்தின் மூலம் வழங்கிய ஆலோசனைகளுக்கு அமைய மாதாந்த கடன் வட்டி கணிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

**07** **பிணைப் பாதுகாப்பு**

கட்டாய சேமிப்பு கணக்கில் உள்ள மீதியினை பிணையாக வைத்துக் கொள்ளல் வேண்டும்.

**08** **கடன் காப்பீடு மற்றும் கூட்டுக் காப்பீட்டுக்கான பங்களிப்பு .**

இக்கடனுக்கும் கடன் மற்றும் கூட்டு காப்பீட்டு வேலைத்திட்டங்களுக்கு பங்களிப்பு செய்யப்படல் வேண்டும்.

**09** **திருப்பிச் செலுத்தும் காலம் மற்றும் சலுகைக் காலம்**

I. திருப்பிச் செலுத்துவதற்கான உயர்ந்தபட்ச காலம் 36 மாதங்களாகும்.
II. 12 மாதங்களை விட கூடாத காலத்தை சலுகைக்காலமாக வழங்க முடியும். (சலுகை காலத்தினையும் சேர்த்து திருப்பிச் செலுத்தும் காலம் உயர்ந்தபட்சம் 36 மாதங்களாகும்)
III. சலுகைக் காலத்திற்கும் மாதாந்த கடன் வட்டி செலுத்தப்படல் வேண்டும்..

**10** கடன் கோரலில் இருந்து அனுமதி வழங்கல், விடுவித்தல் , மீள் அறவீடு செய்தல் என்பன தற்போது நடைமுறையிலுள்ள கடன் தொடர்பான நெறிப்படுத்தல் ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**11** ஒப்பந்தத்தின் பிரகாரம் கடன் தொகையினை மீளச் செலுத்த தவறும் பட்சத்தில நிலுவைக் கடன் தொகையினை வைப்புத் தொகையில் இருந்து ஈடுசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (வேண்டுமென்று செலுத்தத் தவறும் பட்சத்தில்)

**12.** இவ்வேலைத்திட்டத்தின் கீழ் கடன் வசதியினை பெற்று சிறந்த முறையில் முன்னேற்றம் அடையும் பயனுகரிகளுக்கு மேலும் தமது கருத்திட்டத்தை விசாலிப்பதற்கு அடுத்த கடன் வசதியினை பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பாக வங்கி முகாமையாளர் உட்பட பணிக்குழுவினர் பயனுகரிகளுக்கு வழிகாட்டல்களை வழங்க வேண்டும்..

**13** 60 வயதினை தாண்டிய கணக்குரிமையாளர்கள் / இணைந்த கருத்திட்டவாளர்களாக, இவ்வேலைத்திட்டத்தின் கீழ் கடனை கோரி உரிய வருமானமீட்டும் திட்டத்துடன் நேரடியாக தொடர்பு கொள்ள முடியும். முதலாவது கடனாளி மரணிக்கும் / பூரணமாக இயங்க முடியாத நிலைமைக்குள்ளாகும் போது கருத்திட்டத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்திச் செல்வதற்கும் செலுத்த வேண்டியுள்ள மீதிக்கடன் தொகையினை செலுத்துவதற்கும் இணைந்த கடனாளி உடன்படல் வேண்டும். மேலும் இணைந்த கடனாளி ரூபா 500/= பெறுமதியான பங்கினை கொள்வனவு செய்வது கட்டாயமாகும்.

**14**. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கலுக்கான பதிவுகள் ''தன சவிய'' கடன் கணக்கில் (குறியீட்டு இலக்கம் 3122) பொதுப்பேரேட்டில் புதிய கணக்கினை ஆரம்பித்து பதிவு செய்தல் வேண்டும்.

**15** கடன்கோரும் போது இணைப்பு இலக்கம் 01 இல் உள்ள கடன் விண்ணப்பப்படிவத்தை பாவித்தல் வேண்டும். ஏனைய ஒப்பந்தம் / படிவங்கள் என்பன தற்போது பாவனையில் உள்ள ஆலோசனையின் பிரகாரம் பாவிக்க முடியும்.

**16**. கடன் கோரிக்கையினை மிக விரைவாக ஈடுசெய்ய வேண்டியுள்ளது. அதற்காக கட்டுப்பாட்டு சபையின் தழுவ அனுமதியின் (Covering approval) கீழ் கடன் வழங்க முடியும்.

**17**. மாதாந்த முன்னுற்ற அறிக்கைகளை வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் விரைவாக தயாரித்து அனுப்பிவைத்தல் வேண்டும்..

**18**. இவ்வேலைத்திட்டம் தொடர்பாக இவ் ஆலோசனைகளுக்கு மேலதிகமாக ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள கடன் நெறிப்படுத்தல் ஆலோசனைகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும்.

**S.E.R.D.M.S.P.பண்டார,**
பணிப்பாளர் நாயகம்.

**பிரதிகள்** :-

| | | |
|---|---|---|
| 01. செயலாளர், ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சு | – | தகவலுக்காக |
| 02. சகல மாவட்ட செயலாளர்களுக்கும். | - | தகவலுக்காக |
| 03. பிரதான கணக்காளர் , சமு.அபி.திணைக்களம் - | - | தகவலுக்காக |
| 04. பிரதான உள்ளக கணக்காய்வாளர் , சமு.அபி.திணைக்களம் | - | தகவலுக்காக |
| 05. சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் | - | உ.ந.பொருட்டு. |
| 06. சகல நிறைவேற்று சபை தலைவர்களுக்கும் வங்கிச்சங்கம் | - | தகவலுக்காக |
| 07. சகல கட்டுப்பாட்டுசபை தலைவர்களுக்கும் - சமுர்த்தி வங்கி | - | தகவலுக்காக |

TRANSLATED BY - I ALIYAR

**இணைப்பு - 01**

**<u>சமுர்த்தி வங்கியின் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கான ரூபா 15000 /=</u>**
**<u>“தன சவிய” சலுகைக்கடன் விண்ணப்பப்படிவம்</u>**

| அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம் | |
|---|---|
| கடன் விண்ணப்பப்படிவ இலக்கம் :- | கிடைத்த திகதி :- |
| அனுமதிக்கப்பட்ட கடன் தொகை. :- | அனுமதிக்கப்பட்ட திகதி :- |
| கடன் ஒப்பந்த இலக்கம் :- | கடன் விடுவித்த திகதி:- |
| மீளச் செலுத்த வேண்டிய மாதங்கள் :- | சலுகைக் காலம் மாதம் :- |
| மாதாந்த கடன் தவணை :- | தவணை செலுத்த வேண்டிய திகதி:- |

**.................................... சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி**

**01 கடனுக்கு விண்ணப்பிப்பவர் தொடர்பான விபரங்கள்**

I. கடனாளியின் முழுப்பெயர் :-
II. முதல் எழுத்துக்களுடன் பெயர் :-
III. நிரந்தர முகவரி :-
IV. பிறந்த திகதி :-
V. சமுதாய அடிப்படை அமைப்பின் பெயர் :-
VI. அங்கத்தவர் மேிப்பு கணக்கிலக்கம் :-
VII. வயது (2019.03...... திகதியில்) வருடங்கள் :-
VIII. தே.அ.அ.இலக்கம் :-
IX. கட்டாய சேமிப்பு கணக்கிலக்கம் :-
X. 2019...... திகதிய மீதி :- ரூபா.
XI. சமுர்த்தி நலனுதவி :- உண்டு/ இல்லை

**02 கருத்திட்டம் தொடர்பான தகவல்கள்**

I. கருத்திட்டத்தின் பெயர் :-
II. புதிய கருத்திட்டம் / தற்போது நடைமுறைப்படுத்தப்படுவது :-
III. கருத்திட்டம் செயற்படுத்தும் இடம் (நடமாடும் தன்மை இல்லாது) :-
IV. கோரும் கடன் தொகை :- ரூபா
V. கடன் தொகையினை பயன்படுத்தும் விதம்

| விபரம் | செலவு செய்யும் / பயன்படுத்தும் தொகை ரூபா | வேறு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

VI. எதிர்பார்க்கும் வருமானம் (மாதாந்தம்) :- ரூபா

**03 கடனாளி கருத்திட்டவாளராக இல்லாத சந்தர்ப்பங்களில் இணைந்த நபர் தொடர்பான விபரங்கள்**

I. இணைந்த கடனாளியின் பெயர் :-
II. பிறந்த திகதி :-
III. வயது (2019........ திகதியில்) :- வருடங்கள்
IV. கடனாளியுடனான உறவு முறை :-
V. அங்கத்தவர் இலக்கம் :-
VI. தொலைபேசி இலக்கம் :- (கையடக்க/ நிலையான)

**04 சமுர்த்தி வங்கியில் இருந்து பெற்றுள்ள கடன் தொடர்பான விபரங்கள்**

| கடன் பெற்ற காரணம் | தொகை - ரூபா | பெற்றுக்கொண்ட திகதி | செலுத்தி முடிந்துள்ளது/ முடியவில்லை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

மேற்படி தகவல்கள் சரியானதும் உண்மையானதுமாகும். எங்களால் பெற்றுக்கொள்ளப்படும் ரூபா ………………….. கடன் தொகையினை உரிய நடவடிக்கைகு மாத்திரம் பயன்படுத்தி ஒப்பத்திற்கு அமைய நடவடிக்கை எடுப்போம் எனவும் பொருந்திக் கொள்கின்றோம்.

| பெயர் | ஒப்பம் | திகதி |
|---|---|---|
| | | |
| | | |

**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசு**

……………………………………………………… என்பவர், இக்கடன் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு தகமை பெற்றுள்ளார் / பெறவில்லை. அதன் பிரகாரம் ரூபா ............................../- கடன் தொகையினை வழங்க சிபாரிசு செய்கின்றேன். கடன் விடுவிக்கப்பட்டதன் பின்னர் மீள்அறவீடு செய்வதற்காக குறித்துக் கொள்கின்றேன்.

திகதி :- உத்தியோகத்தர் ஒப்பம்

பதவி முத்திரை பெயர்

**வங்கி முகாமையாளரின் சிபாரிசு**

மேற்படி பெயர் குறிப்பிட்டுள்ள விண்ணப்பதாரி இக் கடன் தொகையினை பெற்றுக் கொள்ள தகமை பெற்றுள்ளார்/ பெறவில்லை. ரூபா……………………./- கடன் தொகையினை சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி :-............................................ வங்கி முகாமையாளரின் ஒப்பம்

**கட்டுப்பாட்டு சபையின் அனுமதி**

ரூபா. ................................/- தொகை கடனுக்காக அனுமதிக்கப்படுகிறது/ அனுமதிக்கப்படவில்லை.

தலைவர், கட்டுப்பாட்டுச்சபை